குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# ஆபிரகாமுக்கு தேவனுடைய வாக்குத்தத்தம்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Byron Unger; Lazarus Alastair Paterson

தழுவியவர்: M. Maillot; Tammy S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children

www.M1914.org

©2023 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

ஜலப்பிரளம் நடந்து பல நாட்களுக்குப் பின், பூமியிலுள்ள ஜனங்கள் தங்களுக்கு திட்டம் பண்ண ஆரம்பித்தார்கள்.




பின்னும் அவர்கள்:
நாம் பூமியின் மீதெங்கும்
சிதறிப்போகாதபடிக்கு,
நமக்கு ஒரு நகரத்தையும்,
வானத்தை ...


... அளாவும் சிகரமுள்ள
ஒரு கோபுரத்தையும் கட்டி,
நமக்கு பேர் உண்டாகப்
பண்ணுவோம்
வாருங்கள் என்று
சொல்லிக்கொண்டார்கள்.

தேவன் உருவாக்கிய உலகமுழுவதும் அவர்கள் பரவி வாழவேண்டுமென்று அவர் விரும்பினார். ஆகையால் அவர் ஒரு விசேஷமான காரியத்தை செய்தார்.



திடீரென ஒவ்வொருவரும்
வித்தியாசமான பாஷையிலே
பேச ஆரம்பித்தார்கள். தேவன்
அவர்களுக்கு புதுப்புது
பாஷைகளை கொடுத்தார்.



ஒரே பாஷையை பேசினவர்கள் ஒரு கூட்டமாக பிரிந்து போனார்கள். ஒருவேளை வேறு பாஷைகளை பேசினவர்களை புரிந்து கொள்ள முடியாமற்போனதால்



பயப்பட்டிருக்கலாம்.

இந்த வழியாக, தேவன் ஜனங்களை பலப்பல நாடுகளை நிரப்பும் படியாக செய்தார். அவர்கள் விட்டுச்சென்ற பட்டணத்திற்குப் பெயர் பாபேல். அதனுடைய அர்த்தம் குழப்பம் என்பதாகும்.



பல வருடங்களுக்கு பின்,
கல்தேயர் வாழும்
ஊர் என்னும்
பட்டணத்தில்
உள்ள
மனுஷனாகிய
ஆபிராம்
என்பவனிடத்தில்
தேவன்
பேசினார், ...



... அவனிடம் "நீ  இந்த இடத்தை
விட்டுவிட்டு நான்
காண்பிக்கிற
தேசத்துக்குப்
போ" என்றார்.



ஆபிராம் கீழ்ப்படிந்தான். தேவன் அவனை கானானுக்கு வழிநடத்தினார். அவனுடைய மனைவியாகிய சாராயும், மருமகன் லோத்தும் உடன் சென்றார்கள்.





கானான் தேசத்தில், ஆபிராமும், லோத்தும் மிகவும் ஐசுரியவான்கள் ஆனார்கள். அவர்களிடம் பெரிய கால்நடை கூட்டம் காணப்பட்டது.

அந்த கூட்டத்திற்க்கு தேவையான மேய்ச்சல் நிலம் காணப்படவில்லை.

லோத்தினுடைய மேய்ப்பர்கள் ஆபிராமுடைய மேய்ப்பர்களுடன் சண்டையிட்டார்கள். ஆபிராம் பார்த்து நமக்குள்ளே சண்டை வேண்டாம். அவன் லோத்தை பார்த்து உனக்கு தேவையான மேச்சல் பகுதியை முதலில் தெரிந்தெடுத்துக் கொள் என்று சொன்னான்.



பட்டணங்கள் மற்றும் கிராமங்கள் உள்ளடங்கின பச்ச பசுமையான பெரிய மேச்சல் பகுதியை லோத்து எடுத்துக் கொண்டான்.



அது பார்க்க அருமையாயிருந்தது.
ஆனால் அந்த பட்டணங்களோ
கொடுமையாயிருந்தது.



தேவன் அங்கிருந்து போனபின், தேவன் ஆபிராமோடே பேசினார்.




"நான் கானான்
தேசத்தை உனக்கும்
உன் பிள்ளைகளுக்கும்
என்றென்றைக்கும்
கொடுப்பேன்" ஆபிராமுக்கும்,
சாராயிக்கும் பிள்ளைகள்
இல்லாதிருந்தது.


அப்படியானால் தேவன்
இந்த வாக்குத்தத்தை
எப்படி நிறைவேற்றுவார்?
தவனிடத்திலிருந்து வந்த
மூன்று மனிதர்கள், ஆபிராம்
மற்றும் சாராயிடத்திற்கு
வந்தார்கள்.



"உங்களுக்கு கூடிய சீக்கிரம்
ஒரு குழந்தை கிடைக்கும்" என்று அவர்கள்
சொன்னார்கள். சாராய் நகைத்தாள்.
தேவனுடைய செய்தியை அவள் நம்பவில்லை.



அவளுக்கு
வயது 90. தேவன் ஆபிராமிடத்தில்
உன்னுடைய பெயர் ஆபிரகாம் (மேன்மை
மிகுந்த தகப்பன்) என்றழைக்கப்படும்.



சாராய், சாராள் (இளவரசி)
என்றழைக்கப்படுவாள் என்றார்.


தேவன்
ஆபிரகாமிடத்தில்
சோதோம், கொமாரா
என்ற கொடுமையான
இரண்டு
பட்டணங்களை
அழிக்கப்போகிறேன்
என்றார்.



ஆபிரகாமுடைய மருமகனாகிய லோத் தன்னுடைய குடும்பத்துடன் சோதோமிலே வாழ்ந்து வந்தான்.

தேவனுடைய எச்சரிப்பின் வார்த்தை வந்தபோது லோத் நம்பினான். ஆனால் அவனுடைய மகள்களின் புருஷர்கள் நம்பவில்லை. சோதோமை விட்டுச் செல்ல மறுத்தார்கள். என்ன துயரம்! தேவனுடைய வார்த்தையை அவர்கள் நம்பவில்லை.





லோத்தும் அவனுடைய இரண்டு குமாரத்திகள் மாத்திரம் பாதுகாப்பான இடத்திற்குச் சென்றார்கள். கொடூரமான அந்த பட்டணங்களின் மேல் அக்கினியும், கந்தகமும் விழுந்தது.

மிகவும் துக்கம் என்னவென்றால், லோத்தின் மனைவி தேவனின் எச்சரிப்பை நம்பாமல் பின் திரும்பி பார்த்ததாள்.



உப்புத்தூணாய் மாறினாள்.



தேவன் ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் கொடுத்த வாக்குத்தத்தை காப்பாற்றினார்.

தேவன் சொன்னபடியே அவர்களுடைய வயதான காலத்திலே ஒரு குழந்தை பிறந்தது. ஈசாக்கு பிறந்தபோது அவர்கள் எவ்வளவு சந்தோசப்பட்டார்கள்.



இந்த நேரத்திலே தனக்கும் தன்னுடைய பிள்ளைகளுக்கும் கானான் தேசத்தை கொடுப்பார் என்ற



வாக்குத்தத்தை நினைவு கூர்ந்தான்.

அந்த வாக்குத்தத்தையும் தேவன் நிறைவேற்றுவார். தேவன் எப்போதுமே தன்னுடைய வாக்குத்தத்தை நிறைவேற்றுவார்.



# ஆபிரகாமுக்கு தேவனுடைய வாக்குத்தத்தம்

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

ஆதியாகமம் 11-21

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16